**பிப்ரவரி – 10**

# TNPSC துளிகள்

- கனடாவின் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தால் வழங்கப்படும் வாழ்நாள் சாதனையாளர் விருதுக்கு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கனட திரைப்படத் தயாரிப்பாளர் தீபா மேத்தா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இந்தியா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளுக்கிடையே மருத்துவம் மற்றும் ஹோமியோபதி மரபுசார் அமைப்புகளின் துறைகள் மீது ஒத்துழைப்பு நல்கிட மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- மூத்த இந்தியக் காவல் பணி அதிகாரி ஏ.பி. மகேஸ்வரி மத்திய உள்துறை அமைச்சகத்தின் சிறப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஆந்திரப் பிரதேச மாநில அரசானது அன்னதத்தாளர்களுக்கு (விவசாயிகளுக்கு) நிதியுதவி அளிப்பதற்காக "அன்னதத்தா சுஹிபாவா" என்ற புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- வான்வழி மற்றும் கடல்சார் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு ஏற்பட ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்திய கடலோரக் காவற்படை மற்றும் இந்திய விமான நிலைய ஆணையம் கையெழுத்திட்டுள்ளன.
- 2018-19 ஆம் ஆண்டிற்கான ரஞ்சித் கோப்பைப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஒட்டுமொத்தமாக இரண்டாவது முறையாக சௌராஷ்டிராவை வீழ்த்தி விதர்பா அணி வெற்றி பெற்றுள்ளது. மேலும் விதர்பா அணி தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக ரஞ்சிக் கோப்பையை வென்றுள்ளது.
- புதிய அறிக்கையின்படி, 2018 ஆம் ஆண்டில் ஒரு நாளில் சராசரியாக 10 மணி நேரங்களுக்கு மேல் ஆன்லைனில் (நிகழ் நேரத்தில்) இருக்கும் மிக அதிகளவிலான இணையப் பயனாளர்களை பிலிப்பைன்ஸ் கொண்டுள்ளது.
  - இந்த அறிக்கையில் பிரேசில் இரண்டாவது இடத்திலும் தாய்லாந்து மூன்றாவது இடத்திலும் உள்ளன.
- தாய்லாந்தில் நடைபெற்ற EGAT கோப்பைப் போட்டியில் உலக சாம்பியனான இந்திய பளு தூக்குதல் வீரர் சாய்ஹோம் மீராபாய் சானு தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.
  - வெள்ளிப் பதக்க நிலையிலான ஒலிம்பிக் தகுதிச் சுற்றுப் போட்டியில் 48 கிலோ எடைப் பிரிவில் சானு தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- நாட்டில் ஒட்டுமொத்தமாக சரக்கு மற்றும் சேவைகள் வரி வசூலித்தலில் தமிழ்நாடு 4வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
  - ஒட்டுமொத்தமாக ரூபாய் 70,792 கோடிகள் வரி வசூலித்து மகாராஷ்டிரா மாநிலம் முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்த இடத்தில் உத்தரப் பிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- ஐஐடி மெட்ராஸ் ஆனது தனது நிறுவனத்தில் செயற்கை நுண்ணறிவு மீதான ஆராய்ச்சி மையத்தைத் தொடங்கியுள்ளது.
  - இது ஜெர்மனியை மையமாக கொண்டு செயல்படும் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் பொறியியல் நிறுவனமான ராபர்ட் போஸ் நிறுவனத்துடன் இணைந்து உருவாக்கப்பட்டது.

# தேசியச் செய்திகள்

## தர்வாசா குழு - பகுதி 2

- சுவச் பாரத் திட்டமானது (கிராமின்) நாடெங்கிலும் உள்ள கிராமங்களின் திறந்த வெளிக் கழிப்பிடமில்லா நிலைப்பாட்டின் நிலைத் தன்மைக்காக "தர்வாசா குழு - பகுதி 2" என்ற பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்தப் பிரச்சாரமானது உலக வங்கியினால் ஆதரிக்கப்படுகிறது. மேலும் இந்தப் பிரச்சாரம் தொடங்கிய பின்பு நாடெங்கிலும் இது செயல்படுத்தப்படும்.
- இந்தப் பிரச்சாரமானது மத்திய குடிநீர் மற்றும் துப்புரவுத் துறை அமைச்சகத்தினால் ஏற்படுத்தப்பட்டது.
- இது சமூக மற்றும் கிராம நிலைகளில் நடைமுறை மாற்றம் மற்றும் கழிப்பறைகளின் பயன்பாடுகளை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மீது கவனத்தைச் செலுத்துகிறது.

## இந்திய அளவுத் திட்டம்

- மத்திய ஜவுளித் துறை அமைச்சர் ஸ்மிரிதி இரானி "இந்திய அளவுத்" திட்டத்தை மும்பையில் தொடங்கி வைத்தார்.
- பல மேற்கத்திய நாடுகளில் இருக்கும் அளவுகளைப் போன்று, தயார் நிலையில் உடுத்தும் ஆடைகளை உருவாக்கும் இந்திய ஜவுளித் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய இந்திய தரத்தின் அடிப்படையிலான சரிவிகித ஆடைகளின் அளவை ஏற்படுத்தித் தருவதற்கு இது எண்ணுகின்றது.
- இத்திட்டமானது இந்திய ஆடைத் தயாரிப்பு மன்றத்துடன் இணைந்து (CMAI - Clothing Manufacturers Association of India) அவருடைய அமைச்சகத்தினால் மேற்கொள்ளப்படுகிறது.
- மேலும் இது இந்தியாவின் ஆடை நுகர்விற்கான ஆய்வைத் தொடங்கியுள்ளது.

## சுவஸ்த் நாரி - சக்தி ஹமாரி பிரச்சாரம்

- சமுதாயத்தில் மிகவும் பின்தங்கிய பெண்களிடையே புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது மற்றும் நோயின் ஆரம்பகால நிலை பற்றிய அறிதலை ஏற்படுத்துவது ஆகியவற்றுக்காக "சுவஸ்த் நாரி – சக்தி ஹமாரி" என்ற பிரச்சாரத்தை இந்திய புற்றுநோய் சமூகம் (Indian Cancer Society - ICS) தொடங்கியுள்ளது.
- இது உலக புற்றுநோய் தினத்தின் (பிப்ரவரி 4) போது தொடங்கப்பட்டது.
- இது மருந்தக நிறுவனமான அஸ்திரா செனிகாவுடன் இணைந்து ஒருங்கிணைக்கப்பட்டது.
- இது மகாராஷ்டிரா, தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா போன்ற அதிக பாதிப்புள்ள பகுதிகளில் உள்ள பெண்களுக்காக இலவச மற்றும் சிறப்புப் புற்றுநோய் ஆய்வு முகாம்களை நடத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தேசிய உணவுத் தொழில்நுட்பம், தொழில்முனைவு மற்றும் மேலாண்மை நிறுவன மசோதா - 2019

- மத்திய அமைச்சரவையானது தேசிய உணவுத் தொழில்நுட்பம், தொழில்முனைவு மற்றும் மேலாண்மை நிறுவன மசோதா, 2019-ஐ அறிமுகப்படுத்த ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இம்மசோதாவின் முக்கிய நோக்கம் பின்வரும் நிறுவனங்களுக்கு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் என்ற அந்தஸ்து அளிப்பது ஆகும். அவையாவன:
    - தேசிய உணவுத் தொழில்நுட்பம், தொழில்முனைவு மற்றும் மேலாண்மை நிறுவனம், குண்ட்லி, ஹரியானா.
    - இந்திய உணவுப் பதனிடுதல் தொழில்நுட்ப நிறுவனம், தஞ்சாவூர், தமிழ்நாடு.


## ராஷ்டிரிய காமதேனு ஆயோக்

- மாடுகள் மற்றும் அதன் இனங்களின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்காக ராஷ்டிரிய காமதேனு ஆயோக்கை உருவாக்க மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இது கால்நடை, விலங்கு அறிவியல் அல்லது விவசாயப் பல்கலைக்கழகம் அல்லது மாடுகள் வளர்ப்பு, கரிம எருக்கள் மற்றும் உயிரி வாயுக்கள் போன்ற துறைகளில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் மத்திய/மாநில அரசு நிறுவனங்கள் ஆகியவையுடன் இணைந்துப் பணியாற்றும்.
- இந்தியாவில் ராஷ்டிரிய காமதேனு ஆயோக் அமைப்பது நாட்டு இனங்களின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி உள்ளிட்ட கால்நடை இனங்களின் எண்ணிக்கை மேம்பாடு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு வழிவகுக்கும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## 4-வது வெப்பமான ஆண்டு

- நாசா (NASA) மற்றும் தேசிய கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகத்தின் தகவலின்படி, 1880 ஆம் ஆண்டு முதல் 4-வது வெப்பமான ஆண்டு 2018 ஆகும்.
- 2015, 2016, 2017 ஆகியவை இதற்கு முன்பிருந்த 3 வெப்பமான ஆண்டுகளாகும்.
- 1880 ஆண்டு முதல் உலக புவி மேற்பரப்பு சராசரி வெப்பநிலையானது 2 டிகிரி பாரன்ஹீட் அதிகரித்துள்ளது (1 டிகிரி செல்கியஸ்).
- 2018 ஆம் ஆண்டில் உலக வெப்பநிலையானது 20 ஆம் நூற்றாண்டின் சராசரி வெப்பநிலையை விட 1.42 டிகிரி பாரன்ஹீட் (0.79 டிகிரி செல்சியஸ்) அதிகமாகும்.




# மாநிலச் செய்திகள்

## 7-வது கொல்ஹாபூர் சர்வதேசத் திரைப்படத் திருவிழா

- 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 07 அன்று மகாராஷ்டிராவின் கொல்ஹாபூரில் 8 நாட்கள் நடைபெறும் கொல்ஹாபூர் சர்வதேசத் திரைப்படத் திருவிழாவின் 7வது பதிப்பு தொடங்கியது.
- இத்திருவிழாவின் இலக்கு நாடு ஹங்கேரிய சினிமாவாகும்.
- புகழ்பெற்ற திரைப்படத் தயாரிப்பாளர் கோவிந்த் நிஹாலனி, திரைப்படத் துறையில் சிறப்பாகப் பங்காற்றியதற்காக கலாமஹரிஷி பாபுராவ் ஓவியர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

## பிரவசி பங்காதய ஓய்வூதியத் திட்டம்

- கேரள மாநில அரசு பிரவசி பங்காதய ஓய்வூதியத் திட்டத்தைத் தொடங்கியிருக்கின்றது.
- வெளிநாடு வாழ் மலையாளிகளின் நலனுக்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின்கீழ் வெளிநாடு வாழ் கேரள மக்களுக்கு முறையாக ஓய்வூதியம் வழங்கப்படும். அவர்கள் ரூ.5 இலட்சத்தை ஒரே தவணை முறையாக இதற்குச் செலுத்த வேண்டும்.
- இந்த ஒரு தவணை முறையிலான பணம் செலுத்துதலானது கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக கேரள உள்கட்டமைப்பு முதலீட்டு நிதி மன்ற வங்கியில் (KIIFB - Kerala Infrastructure Investment Fund Board) இருப்பு வைக்கப்படும்.

## ராஜீவ் காந்தி எதிர்கால வாழ்விற்கான தளம்

- ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை உள்ள பள்ளிக் குழந்தைகளுக்காக ராஜீவ் காந்தி எதிர்கால வாழ்க்கைக்கான தளத்தை ராஜஸ்தான் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.
- இந்தத் தளமானது நுழைவுத் தேர்வுகள் குறித்த தகவல்கள், கல்வி உதவித் தொகை மற்றும் வேலை வாய்ப்பு தொடர்பான பாடங்களுடன் எதிர்கால வாழ்விற்கான வழிகாட்டுதல்களை அளிக்க எண்ணுகின்றது.
- இது மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு தொடர்பான கல்வியை அளிக்கும் நோக்கத்திற்கான அரசின் மிகப்பெரிய திட்டமாகும்.
- யுனிசெப்பின் உதவியுடன் வடிவமைக்கப்பட்ட இத்தளம் நாட்டில் இது போன்ற வகையைச் சேர்ந்த முதலாவது தளமாகும்.

## கலியா சத்ரவிர்த்தி யோஜனா

- கலியா சத்ரவிர்த்தி யோஜனா என்ற புதிய திட்டத்தை ஒடிசா மாநில முதல்வர் அறிவித்துள்ளார்.
- இது விவசாயிகளின் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகைத் திட்டமாகும்.
- இத்திட்டத்தின் கீழ், விவசாயிகளின் குழந்தைகளுக்கு தொழில்சார் பிரிவுகளில் உயர்கல்வி பயிலுவதற்கு கல்வி உதவித் தொகை அளிக்கப்படும்.

# இதரச் செய்திகள்

## ஏஜிஸ் கிரஹாம் பெல் விருது - 2019

- கோவாவின் பனாஜியில் கோவா பொழுதுபோக்கு சமூக நலக் கூடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கோவா அரசால் ஏஜிஸ் கிரஹாம் பெல் விருதின் 9-வது பதிப்பிற்கான வெற்றியாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.



- ஏஜிஸ் கிரஹம் பெல் விருதானது (AGBA - Aegis Graham Bell Awards - AGBA) தகவல் தொழில்நுட்பத் துறையில் புத்தாக்கங்கள் மற்றும் தொழில்முனைவுகளை ஊக்குவிக்கிறது.
- இந்த விருதானது ஏஜிஸ் வணிகப் பள்ளி, தகவல் அறிவியல், இணையப் பாதுகாப்பு மற்றும் தொலைத்தொடர்பு ஆகியவற்றின் முன்னெடுப்பாகும். தொலைபேசியின் தந்தையான சர் அலெக்சாண்டர் கிரஹாம் பெல்லின் நினைவாக இவ்விருது உருவாக்கப்பட்டுள்ளது.

- - - - - - - - - - - - - - -